**செ. கு. எண்:321** **நாள் :6.12.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.12.2013

தமிழ்நாட்டில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக, 2.11.2013 அன்று திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை, கீழுர் கிராமம், பூத்தரம் தெங்கால் புரவு பகுதியைச் சேர்ந்த திரு. ராமர் என்பவரின் மகன் முத்தையா;

ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரத்தைச் சேர்ந்த திரு. கணபதி என்பவரின் மகன் பாலசுப்பிரமணியன்;

4.11.2013 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி வட்டம், அயன்பெருவாய் கிராமத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் பணிபுரிந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சின்னஆரம்பட்டியைச் சேர்ந்த திரு. மன்னன் அம்பலம் என்பவரின் மனைவி திருமதி மீனாட்சி, திரு. குமரேசன் என்பவரின் மனைவி போதும்பொன்னு ;

5.11.2013 அன்று கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், குமராட்சி குறுவட்டம், மா.உடையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மனைவி ஜெயந்தி;

18.11.2013 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கீழன்பில் பகுதி ஆலங்குடி மகாசனம் பகுதியைச் சேர்ந்த திரு. வெங்கடாசலம் என்பவரின் மனைவி திருமதி கண்ணகி;

மண்ணச்சநல்லூர் வட்டம், திருவெள்ளாரை கிராமத்தைச் சேர்ந்த திரு. மணிவேல் என்பவரின் மகன் சக்திவேல்;

21.11.2013 அன்று தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டம், வசவப்பபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஹரிராமகிருஷ்ணன் என்பவரின் மகன் நாராயணராமகிருஷ்ணன்;

24.11.2013 அன்று திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், செவரப்பூண்டி மதுரா ராஜமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி சுந்தரி மற்றும் அவரது மகன் திரு. இந்திரா பாண்டியன்;

-- ஆகியோர் இடி, மின்னல் தாக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

14.11.2013 அன்று சென்னை, எருக்கஞ்சேரி, இந்திராகாந்தி நகரைச் சேர்ந்த திரு. ராமு என்பவரின் மனைவி திருமதி புஷ்பா வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9**